# ஈரோடு மாநகராட்சி

# மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 வைகாசித் திங்கள் 18-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு மே மாதம் 31–ஆம் தேதி (31.05.2012) வியாழக்கிழமை காலை **11.30** மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

### கூட்ட நடவடிக்கைகள்

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நன்றி தீர்மானம்

100 ஆண்டு பேசும் ஓராண்டு சாதனைகளை பதவி ஏற்ற ஓராண்டிலேயே நிறைவேற்றி காட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்து கொள்கின்றது.

**வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குதிய துணைமேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், மண்டலத்தலைவர்கள் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட கண்டன தீர்மானம்

சரித்திரம் காணாத அளவிற்கு பெட்ரோலின் விலையினை பலமடங்கு உயர்த்திய மத்திய அரசினை கண்டித்து இம்மாமன்றம் தனது பலத்த கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

**வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குதிய துணைமேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**1) 5.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.28 வ.உ.சி பூங்கா தற்போது காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதனால் பூங்காவில் சமூக விரோதிகள் தவறான வகையில் பூங்காவை பயன்படுத்தி வருகின்றனர். எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு பூங்காவில் அனுமதி நேரத்தை மாலை 3.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பயன்பாட்டில் விட இந்த நடப்பாண்டில் மாற்றம் செய்யக்கோரி 2-வது மண்டலகுழுத்தலைவர், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்ட கோரிக்கையை மாமன்றத்தின் பார்வைக்கும் பரிசீலினைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**சி1/834/12**

**86. ஒத்திவைக்கப்பட்டது.**

**2) 6.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2ற்குட்பட்ட பெரிய சேமூர் பகுதியில் உள்ள அலுவலகத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சி மண்டலம்-2 அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் பணியாளர்கள் அதிகமாக உள்ளதால் அமர்வதற்கு போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் புதிய கூடுதல் கட்டிடம் ( First Floor)ல் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அனுமதி வழங்கலாம்.

**இ1/1529/12**

**87. ஒத்திவைக்கப்பட்டது.**

**3) 9.** ஈரோடு மாமன்ற தீர்மான எண்.179 நாள் 21.12.2012-ன்படி இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அளிக்கப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012ல் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள 7 எண்ணிக்கை பணிகளில் ஆறாவது பணியாக 110 எண்ணிக்கை Dumper bins வாங்குதல் பணியினை ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட டம்பர் பின்களை வாங்குவதற்கு 07.03.2012 தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

1. M/s. Maruthi enterprises
2. M/s SUSI Industries, Korattur, Chennai
3. M/s.GS Body builders PVT Ltd, Pazhamathur Village, Kancheepuram Dt.,
4. M/s.Sri Selliamman steel industries, Erode
5. M/s.Ravi metal works, Vellore

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் வ.எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Maruthi enterprises நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை செலுத்தாமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனையின் படியான தகுதிகளுக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும், ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளது. மேலும் வ.எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Sri Selliamman Steel Industries, Erode நிறுவனம் சிறுதொழில் நிறுவனம் என்பதற்கான சான்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளதால் டேவணித் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்றுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைப்படியான சான்றுகளை முழுமையாக வழங்கவில்லை. எனவே இவ்விரு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க இயலாது.

வ.எண்.2,3 மற்றும் 5 குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சிறுதொழில் நிறுவனம் என்பதற்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளதால் டேவணித் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்றுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளின்படியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளிகளுடன் வழங்கியுள்ளனர். எனவே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெற்றுள்ள இந்நிறுவனங்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதங்கள் பின்வருமாறு.

| S. No | | Qty | Rate/each | Amount |
|---|---|---|---|---|
| 1 | M/s SUSI Industries | 110 | 41400 | Rs.4554000 |
| 2 | M/s.GS Body builders PVT Ltd | | 41900 | Rs.4609000 |
| 3 | M/s.Ravi metal works, Vellore | | 42100 | Rs.4631000 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s SUSI Industries நிறுவனம் வழங்கியுள்ள விலைவிகிதம் குறைவாகவும் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாகவும் உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே M/s SUSI Industries Korattur, Chennai. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s SUSI Industries Korattur, Chennai. நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/10031/11**

**88. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4) 10.** ஈரோடு மாமன்ற தீர்மான எண்.179 நாள் 21.12.2012-ன்படி இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அளிக்கப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012ல் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள 7 எண்ணிக்கை பணிகளில் ஏழாவது பணியாக வாகனத்துடன் கூடிய கொசுமருந்து அடிக்கும் இயந்திரம், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய கொசுமருந்து அடிக்கும் இயந்திரங்கள், இரும்பு தள்ளுவண்டிகள் மற்றும் கொசு மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குதல் பணியினை ரூ.14.20 இலட்ச மதிப்பீட்டில் வாங்குவதற்கு 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு-

1. M/s. Maruthi enterprises
2. Thiru A.Selvaraj, Erode
3. M/s.Vijay mohan electricals, Covai

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் வ.எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Maruthi enterprises நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை செலுத்தாமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனையின் படியான தகுதிகளுக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும், ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ள Portable Fogging machine-க்கான விலை விகிதத்தை வழங்கவில்லை. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது.

வ.எண்.2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினையும் டேவணித் தொகையினையும் வழங்கியுள்ளனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளின்படியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளிகளுடன் வழங்கியுள்ளனர். எனவே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெற்றுள்ள இந்நிறுவனங்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதங்கள் பின்வருமாறு.

| S. No | Materials | Qty | Thiru A.Selvaraj | | M/s.Vijay Mohan eletricals | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount |
| 1 | Vehicle mounted fogging machine | | | | | |
| | i) Fogging machine | 1 | 492540.00 | 492540.00 | 510000.00 | 510000.00 |
| | ii) Vehicle | 1 | 364501.00 | 364501.00 | 393000.00 | 393000.00 |
| 2 | Portable fogging machine | 4 | 38590.00 | 154360.00 | 55750.00 | 223000.00 |
| 3 | Wheel barrows | 20 | 9420.00 | 188400.00 | 12000.00 | 240000.00 |
| 4 | Sprayer | 10 | 4920.00 | 49200.00 | 4930.00 | 49300.00 |
| | Total | | | 1249001.00 | | 1415300.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஏ.செல்வராஜ் அவர்கள் கொசுமருந்து அடிக்கும் இயந்திரத்தை பொருத்துவதற்கு தேவையான வாகனத்திற்கு TATA ACE model வாகனத்திற்கான விலைப்புள்ளியினை இவ்வாகனத்தின் டீலரான L.G.Balakrishnan & Bros Ltd., நிறுவனத்தினடமிருந்து பெற்று வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட வாகனத்தினை இந்நிறுவனத்திடம் நேரடியாக தொகையை செலுத்தி வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும் வ.எண்.1 முதல் 4வரை குறிப்பிடப்பட்டுள்ள மற்ற பொருட்களுக்கு திரு ஏ.செல்வராஜ் அவர்கள் வழங்கியுள்ள குறைந்த விலை விகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அவற்றை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்த இறுதி செய்யும் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே திரு ஏ.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஏ.செல்வராஜ், ஈரோடு அவர்கள் வழங்கியுள்ள குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3. கொசு மருந்து அடிக்கும் இயந்திரத்தை பொருத்துவதற்கு தேவையான (TATA ACE Model) வாகனத்தினை டீலரான (L.G. Balakrishnan & Brothers Ltd.,) நிறுவனத்தினரிடம் இருந்து நேரடியாக வாங்குவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10031/11**

**89. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5) 11.** ஈரோடு மாமன்ற தீர்மான எண்.179 நாள் 21.12.2012-ன்படி இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அளிக்கப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012ல் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள 7 எண்ணிக்கை பணிகளில் மூன்றாவது பணியாக 4 எண்ணிக்கை Dumper placer vehicle மற்றும் 5 எண்ணிக்கை டிரெயிலர்கள் வாங்குதல் பணியினை ரூ.68.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் 5 எண்ணிக்கை Trailer-களை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 07.03.2012 தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு

1. M/s. Sri Motors, Erode
2. M/s.Karumalaian agro Industry, Erode
3. M/s.Sakthi vinayaka engineering works, Perundurai

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் வ.எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Sri Motors, Erode நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனையின் படியான தகுதிகளுக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது.

வ.எண்.2 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவதற்கான விலை மற்றும் டேவணித் தொகையை வழங்கியுள்ளனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளின்படியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளிகளுடன் வழங்கியுள்ளனர். இந்நிறுவனங்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதங்கள் பின்வருமாறு.

| S. No | | Qty | Rate/ each | Amount |
|---|---|---|---|---|
| 1 | M/s.Karumalaian agro Industry, Erode | 5 | 199200 | Rs.996000.00 |
| 2 | M/s.Sakthi vinayaka engineering works, Perundruai | | 199800 | Rs.999000.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Karumalaian agro Industry, Erode நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைவிகிதத்தை மேலும் குறைத்து வழங்க இயலுமா என இவ்வலுவலக 09.03.2012 கடிதம் வாயிலாக கேட்கப்பட்டதில் மேற்கண்ட நிறுவனம் தனது 12.03.2012 கடிதத்தில் டிரெயிலரின் விலைவிகிதத்தை ரூ.197800/-க்கு குறைத்து வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர். அதன்படி மொத்தத் தொகை ரூ. 989000ம் ஆகும். இந்நிறுவனம் வழங்கியுள்ள விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிந்துரை

செய்துள்ளது. எனவே குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள M/s.Karumalaian agro Industry, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Karumalaian agro Industry, Erode நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/10031/11**

**90. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6) 12.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து தலைமை நீரேற்று நிலையங்களில் குடிநீரில் கிருமி நாசினியாகப் பயன்படுத்த திரவ குளோரின் சிலிண்டர் 100 எண்ணிக்கை ரூ.17.60 இலட்சம் மதிப்பில் வாங்கிப்பயன்படுத்திக் கொள்ள மாமன்ற தீர்மான எண்.305 நாள் 09.02.12-ன் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி திரவ குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்ய இ-டெண்டர் முறையில் 07.03.12 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு சிலிண்டரின் விலை | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1 | ஷிவாலிக் கெமிகல் டிரேடர்ஸ், ஈரோடு | ரூ.9600/- | ரூ.960000/- |
| 2 | துளசிராம் கெமிகல்ஸ், ஈரோடு | ரூ.12800/- | ரூ.1280000/- |
| 3 | சபரி கெமிகல்ஸ் | ரூ.16400/- | ரூ.1640000/- |

மேற்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் முன்வைப்புத் தொகையினை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி செலுத்தியுள்ளனர்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s. ஷிவாலிக் கெமிகல் டிரேடர்ஸ், ஈரோடு நிறுவனம் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளருக்கான சான்று மற்றும் முன் அனுபவச் சான்றினை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி சமர்ப்பித்துள்ளார். எனவே குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s. ஷிவாலிக் கெமிகல் டிரேடர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம் என ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு கூர்ந்தாய்வு செய்து பரிந்துரை செய்துள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. ஷிவாலிக் கெமிகல் டிரேடர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிமேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ2/604/12**

**91. அனுமதி வழங்கப்பட்டது.**

**7) 41.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாகத்தில் டெலிபோன் பூத் நடத்தி வரும் மனுதாரர்கள் மேற்படி இடம் ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளதால் பொதுமக்கள் வரத்து குறைவாக உள்ளதால் வருமானம் குறைந்து விட்டதால் டெலிபோன் இடத்தை மாற்றித்தர கோரியுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | பெயர் | தற்போது அமைந்துள்ள இடம் | மாற்றித்தரக் கோரும் இடம் |
|---|---|---|---|
| 1. | பி. ஆனந்த் | பயணிகள் ஓய்வு அறை முன்பு | பவானி மார்க்கம் அருகே உள்ள இடம் |
| 2. | என். செந்தில்குமார் | பேருந்து நிலைய வணிக வளாக கடைக எண்.10 எதிர்புறம் உள்ள காலி இடம் | பேருந்து நிலைய நான்காவது தளத்தில் கடை எண்.23க்கு எதிர்புறம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | பி. பூசப்பன் | பேருந்து நிலைய ஏ.எஸ். கடை எண்.13 எதிர்புறம் உள்ள இடம் | பேருந்து நிலைய 4ம் பிளாட்பாரம் ஜீவா நேரம் காப்பாளர் அலுவலக வடக்கு புறம் அருகில் |

மேற்படி மனுதார்கள் கோரிய இடத்தில் டெலிபோன் பூத்தை பொதுமக்களுக்கு இடையூறு இன்றி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு வைத்துக் கொள்ள அனுமதிகோரியுள்ள விண்ணப்பங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பரிசீலிக்கலாம்.

அ1/1040/12

**92. மனுதாரர்கள் கோரிய இடத்தில் டெலிபோன் பூத் மாற்றம் செய்து வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.**

**8) 60.** ஈரோடு மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத் திட்டம் 2011-12-ல் திடக்கழிவு மேலாண்மை பணியில் இரண்டு எண்ணிக்கை மண் நிரப்புதல் மற்றும் மண் தோண்டுதல் வாகனங்களை (Front end loader and back hoe excavator) ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 7/3/2012 தேதியன்று கீழ்கண்ட நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்தது.

1. M/s SRI Motors, Erode

மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளின்படியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை. மேலும் இந்நிறுவனம் வழங்குவதாக தெரிவித்திருந்த (Front end loader and back hoe excavator)ன் திறன் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வழங்கியுள்ள Specification-ல் குறிப்பிடப்பட்டுள்ள 90 எச்.பி. திறனை விட குறைவாக அதாவது 60 எச்.பி திறன் கொண்டது என தனது கடிதத்தில் தெரிவித்திருந்தது. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது என தெரிவித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிந்துரை செய்திருந்தது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக 12.04.2012 தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு-

| | | Qty | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1. | M/s LEXLS, Salem | 2 No. | Rs.26,35,000/- | Rs. 52,70,000/- |
| 2. | M/s BEML Limited | 2 No. | Rs. 32,91,305/- | Rs. 65,82,610/- |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் டேவணித் தொகையை வங்கி வரைவோலையாக வழங்கியுள்ளனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கி தகுதி பெற்றுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள M/s LEXLS, Salem நிறுவனத்திடம் அந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் வழங்கியுள்ள விலைவிகிதத்தை குறைத்து வழங்க கேட்டு இவ்வலுவலக 16.04.2012 தேதியிட்ட கடிதம் வாயிலாக கேட்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நிறுவனம் தனது 18.04.2012 தேதியிட்ட கடிதத்தில் குறைத்து வழங்க சம்மதம் தெரிவித்துள்ள விலைவிகிதம் பின்வருமாறு-

| | | Qty | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1. | M/s LEXLS, Salem | 2 Nos. | Rs.26,24,500/- | Rs. 52,49,000/- |

மேற்கண்டவாறு குறைத்து வழங்கப்பட்ட விலைவிகிதத்தை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்பொழுது மதிப்பீட்டை விட (+) 4.98 சதவீதம் அதிகமாக

உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி வாகனங்களை விநியோகம் செய்யும் பணிக்கு பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s LEXLS, Salem நிறுவனத்தின் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 4.98 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு நகராட்சி கையேடு பகுதி-2, பத்தி எண்.6.5.5, 6.5.6, 6.5.7 மற்றும் பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டு மதிப்பீட்டுத் தொகைக்கு மேல் இருப்பதால் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

இ1/10031/2011

**93. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9) 61.** ஈரோடு மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி இயக்க திட்டம் 2011-12-ன் கீழ் கழிவுநீர் அகற்றும் வாகனத்தை ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கும் பணியில் வாகனத்திற்கு தேவையான வாகன (Chasis)ஐ அசோக் லைலாண்ட் நிறுவனத்திடமிருந்து நேரடியாக அரசுக்கான சிறப்பு விலை விகிதத்தில் வாங்குவதற்கு 29.03.2012ம் தேதிய மாமன்ற தீர்மான எண். 366-ல் அனுமதி வழங்கப்பட்டு அதற்கான தொகை ரூ.1057499/- மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கழிவுநீர் அகற்றும் வாகனத்தில் 6000 லிட்டர் கொள்ளளவு உள்ள டேங்கர் பொருத்தும் பணியினை ரூ.7.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 03.04.2012 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு-

| | | |
|---|---|---|
| 1. | M/s SUSI Industries, Koratur, Chennai | ரூ.693300.00 |
| 2. | M/s Sakthi body works, Chennai | ரூ.700000.00 |
| 3. | M/s GS Body builders pvt ltd, Pazhamathur village, Kanchipuram district | ரூ.740000.00 |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் வ.எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s SUSI, Industries, Koratur, Chennai நிறுவனம் மற்றும் வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s GS Body builders pvt ltd நிறுவனம் ஆகியவை சிறுதொழில் நிறுவனம் என்பதால் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு பெற்றுள்ளன. மேலும் இவ்விரண்டு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிகளுக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளன.

வ.எண். 2ல் கண்டுள்ள M/s Sakthi body works, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணி தொகையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனையின்படியான தகுதிக்கான சான்றுகளை முழுமையாக வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெற்று குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள M/s SUSI Industries, Koratur, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே அதனை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1/10031/2011

**94. அனுமதி வழங்கப்பட்டது.**

**10) 62.** ஈரோடு மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி இயக்க திட்டம் 2011-12ன் கீழ் நான்கு எண்ணிக்கை டம்பர் பிளேசர் வாகனங்களை ரூ.58.80 இலட்சம் செலவில் வாங்கும் பணியில் வாகனங்களுக்கு தேவையான chasis-களை அசோக்

லைலாண்ட் நிறுவனத்திடமிருந்து நேரடியாக அரசுக்கான சிறப்பு விலைவிகிதத்தில் வாங்குவதற்கு 29.03.12ம் தேதிய மாமன்ற தீர்மானம் எண்.365ல் அனுமதி வழங்கப்பட்டு அதற்கான தொகை ரூ.37,12,388/- மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட 4 எண்ணிக்கை டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தேவையான கருவிகளை ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தும் பணிக்கு 03.04.2012 தேதியன்று வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு-

| | | |
|---|---|---|
| 1. | GS Body Builders Pvt Ltd, Pazhamathur Village, Kancheepuram district | ரூ. 19,78,000.00 |

மேற்கண்ட நிறுவனம் சிறுதொழில் நிறுவனமாதலால் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை ஆகியவற்றை செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு பெற்றுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைப்படியான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கி தகுதி பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட M/s GS Body Builders Pvt Ltd நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாகவும் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாவும் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-
மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1/10031/2011

**95. அனுமதி வழங்கப்பட்டது.**

**11) 63.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டுள்ள விபரப்படி தெரு மின்விளக்குகள் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு மின்விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 12679 |
| 2 | 1 x 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 499 |
| 3 | 2 x 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 907 |
| 4 | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 521 |
| 5 | 150 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 638 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 1600 |
| 7 | 125 வாட்ஸ் மெர்குரி ஆவிவிளக்கு | 84 |
| 8 | 250 வாட்ஸ் மெர்குரி ஆவிவிளக்கு | 325 |
| 9 | 250 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு | 265 |
| 10 | 2 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 36 |
| 11 | 4 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 186 |
| 12 | 5 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 459 |
| 13 | 16 மீ உயர்கோபுர மின்விளக்கு | 24 |
| 14 | 20 மீ உயர்கோபுர மின்விளக்கு | 1 |
| 15 | 10 மீ சிறிய கோபுர மின்விளக்கு | 15 |
| | மொத்தம் | 18239 |

மேலும் தற்போது ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு இயக்கத்திட்டத்தில் 2011-12-ம் ஆண்டிற்கு ரூ.510.00 இலட்சம் செலவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ.எண் | விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 850 |
| 2 | 250 வாட்ஸ் மையத்திட்டு விளக்கு | 200 |

| | | |
|---|---|---|
| 3 | 250 வாட்ஸ் சாலையோர விளக்கு | 270 |
| 4 | உயர்கோபுர மின்விளக்கு 16 மீ உயரம் | 7 |
| 5 | உயர்கோபுர மின்விளக்கு 25 மீ உயரம் | 1 |
| 5 | சிறிய கோபுர மின்விளக்கு | 31 |
| | **மொத்தம்** | **1359** |

தற்போது மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள 18239 தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு ஆண்டுதோறும் மின்கட்டணம் நீங்கலாக சராசரியாக ரூ.155.00 இலட்சம் செலவினம் ஏற்படுவதோடு தெருவிளக்குகளின் மின்சார பயனீட்டுக் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.29.00 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.348.00 இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலவு ஏற்படுகிறது.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களின் 22.02.12 தேதிய கடிதம் எண்.36321/2011/E1-ல் தெருவிளக்கு பராமரிப்பில் மின்சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்சார செலவினை குறைக்க கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தில் தெருவிளக்குகளை மின்சிக்கன விளக்குகளாக மாற்றியமைத்தல் மற்றும் தெருவிளக்குகளை இயக்குதல் மற்றம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் ஆகியவற்றை சேர்த்து விரிவான பணியாக மேற்கொள்ள ஆலோசனை கூறப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்க திட்டத்தில் 2011-12ம் ஆண்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள புதிய தெருவிளக்கு அமைக்கும் பணிகளில் தேவையான அளவில் எல்.இ.டி தெருவிளக்குகளை மாநகராட்சி மற்றும் தனியார் பங்களிப்புடன் பொருத்தவும் வலியுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசின் மானியக் கோரிக்கை எண்.34க்கான அறிவிப்புகளில் அறிவிப்பு எண்.23-ல் தெருவிளக்குகளின் எரிசக்தி திறன் சேமிப்பு நடவடிக்கைகள் தலைப்பில் மாநகராட்சிகளில் தற்போது பயன்பாட்டிலுள்ள குழல்விளக்குகளுக்கு (FTL's) பதிலாக எல்.இ.டி (LED) போன்ற ஆற்றல் மிக்க மின்விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு தற்பொழுது அதிகளவில் இருக்கும் 4'-40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி (LED) மின்விளக்குகளாக மாற்றி அமைத்தும் மற்றும் தெருமின்விளக்குகளுக்கான ஸ்விட்சுகளில் Voltage controller உபகரணங்களை பொருத்தும் பட்சத்திலும் மின்பயனீட்டு அளவைக் குறைக்க வாய்ப்பு உள்ளது. அதிலும் குறிப்பாக பிரதான போக்குவரத்து சாலைகளில் போக்குவரத்து குறைவாக இருக்கும் நள்ளிரவு முதல் விடியற்காலை வரை மின்விளக்குகள் எரியும் சக்தியின் அளவை தானாக குறைப்பதற்கான வழிவகையும் மேற்படி உபகரணத்தில் செய்யப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதன்படி தற்பொழுது செலுத்தப்பட்டு வரும் மின் பயனீட்டு கட்டணத் தொகையில் 35 சதவீதத் தொகை சேமிப்பாவதற்கு வாய்ப்புள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு 4' - 40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி (LED) மின்விளக்குகளாக மாற்றுவதன் மூலமும் மற்றும் Voltage Controller உபகரணங்களை பொருத்துவதன் மூலம் மின்பயனீட்டுக் கட்டணத் தொகை குறைவதைக் கண்டறியும் வகையிலும் தற்பொழுது தெருமின்விளக்குகளுக்கான மின்பயனீட்டு அளவுகளை தணிக்கை செய்யும் வகையிலும் ஆற்றல் திறன் செயலகத்தின் மூலம் (Bureau of Energy Efficiency) சான்றிதழ் பெற்ற மின்சக்கதி தணிக்கையாளர் மூலம் மின்பயனீட்டு அளவுகளை தணிக்கை செய்வதன் மூலமே மின்பயனீட்டு அளவு குறைவதை கண்டறிய இயலும். மேற்கண்டவாறு மின்பயனீட்டு அளவை தணிக்கை செய்வதற்கு ஆகும் செலவினத் தொகையை தேர்வு செய்யப்படும் நிறுவனமே தன் சொந்த பொறுப்பில் செலுத்த வேண்டும்.

மேலும், மேற்குறிப்பட்டுள்ளவாறு மின்பயனீட்டு அளவு தணிக்கை செய்தால் மட்டுமே கார்பன் கிரடிட் (Carbon Credit) மூலம் அரசிடமிருந்து ஊக்கத் தொகை பெற இயலும். அவ்வாறு கிடைக்கப்பெறும் ஊக்கத் தொகையில் முதல் 5 வருடத்திற்கு 50 சதவீதம் தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு மீதமுள்ள 50 சதவீதம் மாநகராட்சி நிதியில் சேர்க்கப்படும். மீதமுள்ள 5 ஆண்டிற்கு 20 சதவீதம் தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு மீதமுள்ள 80 சதவீதம் மாநகராட்சி நிதியில் சேர்க்கப்படும்.

எனவே ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி தெருமின்விளக்குகளுக்கு செலுத்தப்பட்டு வரும் மின்பயனீட்டுக்

கட்டணத்தை குறைப்பதற்கு இத்துறையில் நன்கு அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டியுள்ளது.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள தற்போதுள்ள 4'-40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளை எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றியமைக்கவும், மின் விளக்குகளுக்கான சுவிட்சுகளில் Street light Controller Unit மற்றும் Voltage controller உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்கி பராமரிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்த செலவினத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 4'-40 வாட்ஸ் குழல் விளக்குகளை 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் | 12679 | 5980.00 | 75820420.00 |
| 2 | தெருவிளக்கு கட்டுப்படுத்தும் கருவி (Street light Controler Unit) LED மின் விளக்குகளுக்கு மட்டும் | 500 | 17500.00 | 8750000.00 |
| 3 | வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணம் | 66 எண்ணிக்கை மும்முனை மின்இணைப்பு | 108000.00 | 7128000.00 |
| | | 1113 எண்ணிக்கை ஒரு முனை மின் இணைப்பு | 43000.00 | 47859000.00 |
| 4 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 1856 | 6480.00 | 12026880.00 |
| 6 | இணையதள கண்காணிப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் (Centralized monitoring station) | 1 | 1567000.00 | 1567000.00 |
| | **மொத்தம்** | | | **153151300.00** |

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட உள்ள தெருவிளக்குகளுக்கும், அந்த மின் விளக்குகளுக்கான சுவிட்சுகளில் வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்கி பராமரிப்பதற்கும் ஆகும் செலவினத் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்த செலவினத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | புதிய 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல் | 850 | 5980.00 | 5083000.00 |
| 2 | புதிய 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துதல் | 670 | 7000.00 | 4690000.00 |
| 3 | தெருவிளக்கு கட்டுப்படுத்தும் கருவி (Street light Controler Unit) LED மின் விளக்குகளுக்கு மட்டும் | 85 | 17500.00 | 1487500.00 |
| 4 | வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணம் | 42 எண்ணிக்கை மும்முனை மின்இணைப்பு | 108000.00 | 4536000.00 |
| | | 31 எண்ணிக்கை ஒரு முனை மின் இணைப்பு | 43000.00 | 1333000.00 |
| 5 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 175 | 6480.00 | 1134000.00 |
| | **மொத்தம்** | | | **18263500.00** |

**செலவின சுருக்கம்**

| | | |
|---|---|---|
| (i) தற்போதுள்ள 40 வாட்ஸ் தெருவிளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி. விளக்குகள் பொருத்துதல் மற்றும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்துதல் | - | 153151300.00 |
| (ii) ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க திட்டம் 2011-12-ல் அனுமதியளிக்கப்பட்ட பணிகளில் புதிய எல்.இ.டி. சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துதல் மற்றும் புதிய தெருவிளக்குகளுக்கு வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்துதல் | - | 18263500.00 |
| | | 171414800.00<br>அல்லது<br>171500000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள தற்போதுள்ள மற்றும் புதிய தெருவிளக்குகளுக்கு மின்சிக்கன விளக்குகள் மற்றும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1715.00 இலட்சம் தேர்வு செய்யும் நிறுவனத்தால் செலவிடப்படும். மேலும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்களை பொருத்தி இயக்கும் பொழுது மின்சேமிப்பு தொகை குறைந்தபட்சம் 35 சதவிகிதத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில் தேர்வு செய்யப்படும் நிறுவனத்தால் செலவிடப்படும் தொகை கீழ்கண்டவாறு வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | வருடம் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | செயல்படுத்தும் ஆண்டு<br>a. பொருட்கள் வழங்கப்பட்ட பின் | 25% முதலீடு தொகை |
| | b. பொருட்கள் பொருத்தி இயக்கப்பட்ட பின் | 25% முதலீடு தொகை |
| 2 | முதலாண்டு இறுதி | 12.5% முதலீடு தொகை மற்றும் 50% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 3 | இரண்டாம் ஆண்டு இறுதி | 12.5% முதலீடு தொகை மற்றும் 37.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 4 | மூன்றாம் ஆண்டு இறுதி | 12.5% முதலீடு தொகை மற்றும் 25% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 5 | நான்காம் ஆண்டு இறுதி | 12.5% முதலீடு தொகை மற்றும் 12.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |

மின்சேமிப்பு தொகை 35 சதவீதம் கிடைக்காத பட்சத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு வருடமும் இறுதியில் 12.5 சதவீத தொகையினை தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு மாநகராட்சி திரும்ப செலுத்த வேண்டியதில்லை.

மேலும் தேர்வு செய்யப்படும் நிறுவனம், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மின்விளக்குகளையும் பராமரித்து எரியாத மின்விளக்குகளை மாற்றி எரியவிடுதல், பழுதடைந்த இதர மின் உபகரணங்கள் மற்றும் மின்வடங்கள் போன்றவைகளை மாற்றியமைத்தல் ஆகிய பராமரிப்பு பணிகளுக்கு தேவையான அனைத்து மின்உபகரணங்களையும் தம் சொந்த செலவில் வாங்கி தன் சொந்த பொறுப்பில் பொருத்தி அதற்கு தேவையான ஏணி பொருத்தப்பட்ட வாகனத்திற்கான செலவினம் (எரிபொருள் உட்பட) ஓட்டுனர் ஊதியம் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள், மின்கம்பி உதவியாளர்கள் போன்றவர்கள் பணி புரிவதற்கான ஊதியம் வழங்குதல் மேலும் இதன் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் இணையதளம் மூலம் கண்காணிக்கத் தேவையான கணினி அதன் தொடர்புடைய இதர உபகரணங்கள் அதனை இயக்குவதற்கான கணினி இயக்குபவர் அதற்குண்டான செலவினம் மற்றும் பணிபுரிபவர்களுக்கு தேவையான இன்சூரன்ஸ் மற்றும் தொழிலாளர் வைப்பு நிதி போன்ற அரசு விதிமுறைகளுக்குட்பட்ட அனைத்தையும் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்று பராமரித்துக் கொள்ள வேண்டியது. மேற்கண்டுள்ளவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் பராமரிக்கும்பொழுது பராமரிப்பிற்கான செலவினம் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்டு தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்படும். மின்கட்டணம் மாநகராட்சி மூலம் செலுத்தப்படும். இப்பராமரிப்பு 10 வருட

காலத்திற்கு மேற்கொள்வதால் பராமரிப்பு மேற்கொள்வதன் தொகையில் வருடத்திற்கு 15 சதவீதம் சேமிப்பதால் மாநகராட்சிக்கு கூடுதல் சேமிப்பு ஏற்படுகிறது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ளவாறு தெருமின்விளக்குகளுக்காக தற்போது மின்சார வாரியத்திற்கு செலுத்தப்படும் மின் பயனீட்டு அளவை குறைக்கும் நோக்கில் மாநகராட்சிக்குட்பட்ட தற்போதுள்ள 4'-40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 20 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளை பொருத்திடவும், ஒருங்கிணைந்த நகர்புற மேம் பாட்டு இயக்கத் திட்டத்தில் தெருவிளக்கு பணியில் 36 வாட்ஸ் சி.எப்.எல். மின்விளக்குகளுக்கு பதிலாக 20 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளை பொருத்திடவும், மையத்திட்டு மற்றும் சாலையோர தெருவிளக்குகளுக்கு தேவையான 250வாட்ஸ் மின்விளக்குகளை பொருத்தவும் மின்பயனீட்டு அளவை குறைப்பதற்கு தெருவிளக்கு சுவிட்சுகளில் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்களை தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் வழங்கி பொருத்தி இயக்கி பராமரிக்கவும், மற்றும் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளில் எரியாத தெருவிளக்கினை மாற்றி அதன் தொடர்புடைய இதர மின்உபகரணங்களையும் புதிதாக மாற்றியமைத்து எரிய விடும் பணிகளையும் 10 ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்படும் தனியாரிடம் உரிய கட்டணம் செலுத்தி பராமரிக்கலாம் என்பதனை பரிசீலித்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அன்னாரின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2249/12**

**96. மாநகராட்சியின் நிதி நிலை சரியில்லாத காரணத்தாலும் தனியாருக்கு விடப்படும் போது அதிக செலவினங்கள் ஆகும் என மாமன்றம் கருதுவதாலும் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட மின்விளக்குகள் பழுது ஏற்படும் பொழுது அவ்வப்போது குழல் விளக்குகளுக்குப் பதிலாக எல்.இ.டி மின்விளக்குகள் பொருத்தலாம் என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**தற்போது மாநகராட்சி புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சியாக இருப்பதால் புதிதாக கிராமப்பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது. அங்கு தேவையான இடங்களில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் அங்கு புதிதாக தெருவிளக்குகள் போட வேண்டியுள்ளது. ஆகவே புதிய இடங்களில் போடும் புதிய தெருவிளக்குகளுக்கு எல்.இ.டி பல்புகளை பயன்படுத்தலாம் எனவும் இப்பொருளை ரத்து செய்யலாம் எனவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**12) 76.** ஈரோடு மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தேவைப்படும் மின் உதிரி பொருட்களை ரூ.30.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்த மாமனற் தீர்மானம் எண்.58 நாள் 21.12.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் உதிரி பொருட்களை வாங்க 07.02.12 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பொருட்கள் பெறப்பட்டது. தற்போது மேலும் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் உதிரிப் பொருள்களை வாங்க 04.05.12 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

1. M/s.Reliant Global Green Energy & Co., Coimbatore
2. M/s. Quality Engineering, Dharmapuri
3. M/s.Dowell associates, Chennai.
4. M/s. Beema Electrical Agency, Erode.

மேற்கண்ட நான்கு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையை செலுத்தியுள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைப்படியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நான்கு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலை விகிதங்கள் பின்வருமாறு.

| Sl. No | Materials | Quantity | M/s.Reliant Global Green Energy & Co., Coimbatore | M/s. Quality Engineering, Dharmapuri | M/s.Dowell associates, Chennai | M/s. Beema Electrical Agency, Erode. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 40W FTL bulb | 1000 | 42.00 | 40.00 | 42.00 | 43.90 |
| 2 | 40W FTL Choke | 500 | 190.00 | 145.00 | 165.00 | 213.00 |
| 3 | 40W FTL Starter | 1000 | 8.75 | 7.00 | 8.45 | 8.75 |
| 4 | 40W FTL Side holder | 300 | 8.75 | 8.00 | 8.00 | 8.75 |
| 5 | 70W SVL Bulb | 50 | 258.00 | 300.00 | 270.00 | 268.00 |
| 6 | 70W SVL choke | 50 | 850.00 | 795.00 | 840.00 | 924.00 |
| 7 | 150W SVL bulb | 100 | 295.00 | 460.00 | 460.00 | 378.00 |
| 8 | 150W SVL choke | 40 | 1100.00 | 1450.00 | 1400.00 | 1300.00 |
| 9 | 250W SVL bulb | 150 | 350.00 | 460.00 | 490.00 | 433.00 |
| 10 | 250W MH bulb | 50 | 810.00 | 950.00 | 1010.00 | 822.00 |
| 11 | 250W SVL/MH choke | 100 | 1750.00 | 1925.00 | 1740.00 | 1890.00 |
| 12 | 70/150/250W SVL ligniter | 300 | 198.00 | 225.00 | 170.00 | 198.00 |
| 13 | 250W SVL bulb holder | 50 | 162.00 | 140.00 | 150.00 | 162.00 |
| 14 | 36W CFL Bulb | 50 | 168.00 | 160.00 | 170.00 | 168.00 |
| 15 | 36W CFL choke | 500 | 175.00 | 250.00 | 220.00 | 187.00 |
| 16 | 11W CFL Bulb | 50 | 69.00 | 85.00 | 80.00 | 69.00 |
| 17 | 11W CFL choke | 30 | 183.00 | 140.00 | 140.00 | 183.00 |
| 18 | 3/20 Aluminum coil | 10 | 385.00 | 375.00 | 360.00 | 385.00 |
| 19 | 7/20 Aluminum coil | 10 | 725.00 | 700.00 | 790.00 | 725.00 |
| 20 | 7/16 Aluminum coil | 5 | 2035.00 | 1800.00 | 2550.00 | 2035.00 |
| 21 | 24W T5 bulb | 50 | 148.00 | 160.00 | 175.00 | 148.00 |
| 22 | PVC insulation Tape | 500 | 9.80 | 9.00 | 10.00 | 9.80 |
| 23 | 40W MH bulb | 25 | 810.00 | 1110.00 | 1110.00 | 847.00 |
| 24 | 40W MH choke | 20 | 2750.00 | 2150.00 | 2650.00 | 2971.00 |
| 25 | Timer clock | 35 | 2900.00 | 2150.00 | 2850.00 | 3190.00 |

மேற்கண்ட பொருட்களில் வ.எண்.1 முதல் 4 வரை, 6, 13, 14, 17,19, 20, 22, 24, மற்றும் வ.எண்.25ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.303700/- மொத்த தொகைக்கு M/s.Quality Engineering, Dharmapuri நிறுவனம் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளனர். வ.எண்.5, 7,8,9,10,15,16,21 மற்றும் 23ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.298000/- மொத்த தொகைக்கு M/s.Reliant Global Green Energy &

Co., Coimbatore நிறுவனம் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளது. வ.எண்.11, 12, மற்றும் 18ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.228600/- மொத்த தொகைக்கு M/s.Dowell associates, Chennai நிறுவனம் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளது. எனவே இந்நிறுவனங்களின் விலை விகிதங்களை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/11057/11**

**97. அனுமதி வழங்கப்பட்டது.**

**13) 77.** ஈரோடு மாநகராட்சி 25.10.2011 முதல் 4 மூன்றாம் நிலை நகராட்சிகள், 2 பேரூராட்சிகள், 5 ஊராட்சிகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு 60 வார்டுகள் 4 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியில் மாநகரப் பொறியாளர் பணியிடம் 24.03.2012 முதல் காலியாக உள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகள் 1996–ன்படி மாநகரப் பொறியாளர் பணியிடமானது கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

வகுப்பு – I
வகை – I
இனம் – I

மாநகரப் பொறியாளர் பணியிடத்தை மாநகராட்சி பணிவிதிகளின்படி பதவி உயர்வு மூலம் அல்லது அயற்பணி மூலம் நிரப்பலாம்.

ஈரோடு மாநகராட்சியில் தற்போது இரண்டு செயற் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. திரு. ஆர். சதாசிவம், செயற் பொறியாளர் (திட்டம்)
2. திரு. கே. ஆறுமுகம், செயற் பொறியாளர் (பணிகள்)

மேற்படி இருவரும் மாநகராட்சி பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை. எனவே ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவின் அத்தியாவசியப் பணிகள் பாதிக்கப்படாதவாறு காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியின் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படாதவாறு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/725/12**

**98. ஒத்தி வைக்கப்பட்டது.**

**14)** ஈரோடு மாவட்டம் ஈரோடு காலிங்கராயன் இல்லத்தில் காலிங்கராயன் சிலை அமைக்க ஈரோடு காலிங்கராயன் சிலை அமைப்புக்குழு பொருளாளர் திரு. என். கொளந்தசாமி என்பவர் கொடுத்த மனு மீது ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சிலை அமைக்க அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார். காலிங்கராயன் சிலை அமைக்க மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் பெற்று அனுப்பி வைக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 15602/2012/எம்2 நாள் 25.04.2012ந் தேதிய கடிதம் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான காலிங்கராயன் பயணிகள் இல்ல வளாகத்தில், காலிங்கராயன் சிலை வைக்க ஆட்சேபனை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கலாம்.

**இ3/1162/12**

**99. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**15)** ஈரோடு நகராட்சியாக இருந்தபோது கீழ்குறிப்பிட்டுள்ள கட்டுமானங்களுக்கு நிலமெடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு கைவிடப்பட்டுள்ளது. மேற்படி நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொண்டதற்கான நிறுவன செலவுத் தொகை ரூ.69,38,595/-ஐ செலுத்தும்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ந.க.எண். 7891/2000/அ3 நாள் 26.04.12ல் தெரிவித்துள்ளார்.

1. ஈரோடு நகரம் வார்டு ஏ, பிளாக்-24 ட.ச.எண்கள். 63 முதல் 70 வரையிலான புலங்களில் 0.0632.1 ஹெக்டர் நிலத்தை ஈரோடு நகராட்சி வாரசந்தைக்கு 80 அடி அகல அணுகு சாலை அமைக்க 1990ல் நடவடிக்கை மேற்கொண்டு அணுகு சாலைக்கான ஈட்டுத் தொகை செலுத்த முன்வரவில்லை என அரசால் கைவிடப்பட்டதால் இதற்குண்டான நிறுவன செலவுத் தொகை ரூ.45,043/-

2. ஈரோடு நகரம் வார்டு ஏ, பி-24 நகரளவு எண். 9/2,82,83,84 மற்றும் 85 ஆகிய புலங்களில் உள்ள 7.90 ஏக்கர் நிலம் வாரச்சந்தை அமைக்க 1990ல் நிலமெடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு ரூ.3,06,77,783/-ஐ நகராட்சி செலுத்த ஏற்புடையதாய் இல்லை என அரசால் கைவிடப்பட்டதால் அதற்குண்டான நிறுவன செலவுத் தொகை 38,84,959/-

3. வார்டு-ஏ, பிளாக்-9. ட.ச.எண்.155ல் 1-1452 ச.மீ சத்தி சாலையில் சரக்கு பேருந்து நிலையம் அமைக்க 1987ல் நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலமதிப்புத் தொகை ரூ.2,82,62,667/- செலுத்த சாத்தியக்கூறுகள் இல்லை என அரசால் கைவிடப்பட்டு அதற்குண்டான நிறுவன செலவுத் தொகை ரூ.2598021/-

4. ஈரோடு நகரம் வார்டு ஏ,பி.9 டி.எஸ்.147 மற்றும் 154ல் சரக்கு பேருந்து நிலையம் அமைக்க 0.0121.4 ச.மீ நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு நில ஆர்ஜிதம் செய்ய நகராட்சி நிதிநிலைமை இடம் தராது என அரசால் கைவிடப்பட்டது. அதற்குண்டான நிறுவன செலவுத் தொகை ரூ.410572/- ஆகும்.

ஆகமொத்தம் ரூ. 69,38,595/- வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது.

தற்பொழுது ஈரோடு மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளையும் சேர்த்து 109.52 ச.கி.மீட்டர் பரப்பளவுள்ள மாநகராட்சியாக ஈரோடு மாநகராட்சி செயல்பட்டு வருகிறது. இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் பெருமளவு செய்ய வேண்டியுள்ளது. மேற்படி நிறுவன செலவுத் தொகையை செலுத்த மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை. எனவே மேற்படி நிறுவன செலவுத் தொகையினை சிறப்பினமாக கருதி தள்ளுபடி செய்ய அரசிற்கு முன்மொழிவு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

நிலமெடுப்பு நிறுவன செலவுத் தொகை ரூ.69,38,595/-ஐ சிறப்பினமாக கருதி தள்ளுபடி செய்ய அரசிற்கு முன்மொழிவு அனுப்பலாம்.

**எப்1-13262-90**

**100. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16)** இம்மாநகராட்சியில் செயல்திறனற்ற பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. பி. மோகன்ராஜ் என்பவர் போலி சான்று கொடுத்து பதவி உயர்வு பெற்றதை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் வழக்கறிஞரின் ஆலோசனைப்படி பதவி இறக்கம் செய்து உத்திரவிடப்பட்டு 8(2)-வில் குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பதவி இறக்கம் செய்ததை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. பி. மோகன்ராஜ் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். டபிள்யூ.ப்பி.29193/11.

மேற்படி வழக்கில் ஈரோடு மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்த திரு. பி. சீனிவாஸ், அட்வகேட், சென்னை அவர்களுக்கு வக்காலத்து வழங்கவும், மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

பி2/27559/97

**101. அனுமதி வழங்கப்பட்டது.**

**17)** இம்மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வ.உ.சி. பூங்காவினை தனியார் மூலம் 2011-2012ம் வருடாந்திர பராமரிப்பு செய்து வர மாமன்றம் தனது தீர்மானம் எண்.71 நாள் 28.01.2011 மற்றும் தீர்மானம் எண். 249 நாள் 25.04.2011ன்படி ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் மெசர்ஸ் சுரபி நர்சரி, ஈரோடு ஒப்பந்ததாரர் மூலம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தம் 16.05.2012ம் தேதியுடன் முடிவடைகிறது. தற்போது பூங்காவினை பராமரிக்க மாநகராட்சி வசம் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், இப்பணியை இன்னும் 1 மாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்தில் நீடிப்பு செய்யவும் மற்றும் அதற்கான கூடுதல் செலவினத் தொகை ரூ.90,000/-க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதியின்பேரில் பணியை செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/492/11

102. **அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியை இன்னும் ஒருமாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்தில் நீட்டிப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**மேலும் ஒரு மாதத்திற்கு பிறகு மறு ஏலம் வைக்க தீர்மானிக்கப்பட்டது.**

**18)** ஈரோடு மாநகராட்சிக்கு ஈரோடு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒப்படைக்கப்பட்ட மண்டலம்-3 எல்லைக்குட்பட்ட டீச்சர்ஸ் காலனியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் வடபுறம் கிழக்கு பார்த்த 45' x 26' அளவுள்ள ஆர்.சி.சி. பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து மேற்கூரைகள் பெயர்ந்தும் சுவர்களில் விரிசல்கள் அடைந்தும் பள்ளி குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்க கூடிய நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யப்பட்டதில் கட்டிடத்தினை சீரமைப்பு செய்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அவசியமாகிறது. எனவே பழுதடைந்த பள்ளி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1/1682/12

**103. அனுமதி வழங்கப்பட்டது.**

**19)** நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நேர்முக கடித எண். 21802/2011/UP1 நாள். 30.03.2012ல் பூங்கா அமைக்க தேவையான நிதி உதவிகளை நகர்ஊரமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் ஈரோடு மாநகராட்சியில் பூங்கா அமைக்க உரிய கருத்துருக்களை அனுப்பி வைக்க தெரிவித்துள்ளார்கள். எனவே ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 வார்டு எண்.31 திண்டல் லட்சுமி நகர் பகுதியில் ச.எண்.61/1,2,3ல் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவில் (ம.வ/ந.2.இ எண். 1271/91) பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மேற்படி மான்ய நிதியிலிருந்து பூங்கா அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கு தேவையான மான்ய நிதியை பெற நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், மான்ய நிதி ஒதுக்கீடு போக தேவைப்படும் நிதியை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/1520/12**

**104. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**20)** ஈரோடு மாநகராட்சி நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாதவாறு உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டதற்கிணங்க ஈரோடு மாநகராட்சியில் வார்டு எண்.5 ஞானபுரம் பகுதியில் புதிய கழிப்பிடம் கட்ட ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 29.02.12ல் ஒப்புதல் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 22.03.12 அன்று கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு-

திருவாளர்கள் தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் +7.10% மதிப்பீட்டை விட அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகைக்காக மாநகராட்சி கருவூலகத்தில் பணமாக செலுத்தியுள்ளார்.

மேற்படி தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.10% அதிகமாக இருந்ததால் இவ்வலுவலக கடிதம் எண். இ1/10096/11 நாள் 22.03.12ன்படி மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 26.03.12ம் தேதிய கடிதத்தில் மேலும் விலையினை குறைத்துக் கொடுத்துள்ளார். குறைத்துக் கொடுத்த விலைவிகிதத்தை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திருவாளர்கள் தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் 0.01% மதிப்பீட்டை விட குறைவு

பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருவாளர்கள் தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் 0.01% மதிப்பீட்டை விட குறைவு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

மேலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/10096/11**

**105. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**21)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IIக்குட்பட்ட காவேரி சாலை ஆயுர்வேத மருத்துவமனை கட்டிடம் மிகவும் பழமையானதாகவும் பழுதடைந்தும் உள்ளதால் இதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு நவீன வசதிகளுடன் புதிதாக ஆயுர்வேத மருத்துவமனை கட்டுவதற்கு தயாரித்துள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2669/12**

**106. அனுமதி வழங்கப்பட்டது.**

**22)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IIIக்குட்பட்ட நேதாஜி சாலை ஆயுர்வேத மருத்துவமனை கட்டிடம் மிகவும் பழமையானதாகவும் பழுதடைந்தும் உள்ளதால் இதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு நவீன வசதிகளுடன் புதிதாக ஆயுர்வேத மருத்துவமனை கட்டுவதற்கு தயாரித்துள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2670/12**

**107. அனுமதி வழங்கப்பட்டது.**

**23)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ன் வார்டு எண்.42ல் என்.ஜி.ஜி.ஓ காலனி-2ல் உள்ள மழைநீர் வடிகால் சரியான வாட்டம் இல்லாததால் கழிவுநீர் கிழபுறமாக தேங்கி சுகாதாரக்கேடு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. மற்றும் தேங்கி நிற்கும் கழிவுநீரை ஒருநாள் விட்டு ஒருநாள் கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரம் கொண்டு அகற்றப்பட்டு வருகிறது. இக்கழிவுநீரை நிலவாட்டத்திற்கு ஏற்ப மாரப்பா வீதி-3ன் வழியாக புதிய மழைநீர் வடிகால் அமைத்து கொண்டு செல்லலாம். எனவே என்.ஜி.ஜி.ஓ காலனி-2ல் உள்ள வடிகாலை மராமத்து செய்து மாரப்பா வீதி-3ல் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2671/12**

**108. அனுமதி வழங்கப்பட்டது.**

**24)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் - II-க்குட்பட்ட வார்டு எண்.21 திருமால் நகர் பகுதியில் மாரியம்மன் கோவில் வளாகத்தில் உள்ள 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்போது இத்தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் ஏதும் எப்பகுதிக்கும் செய்யப்படவில்லை. இந்நீர்த்தேக்கத் தொட்டியின் தூண்கள் ஆங்காங்கே அரித்த நிலையில் உள்ளது. இதனால் இடிந்து விழும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும், உயிர்சேதம் ஏற்படுவதை தவிர்க்கவும், மேற்படி மேல் நீர்த்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்தவும், மாநகராட்சி சொத்து பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்வதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அபாயகரமான சூழ்நிலையில் உள்ள காரணத்தினால் மேற்படி பழுதடைந்த பயன்படுத்த முடியாத உயர்மட்ட தேக்கத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2668/12**

**109. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**25)** இம்மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வ.உ.சி. பூங்காவில் பல்வேறு திட்டப்பணிகள் வாயிலாக அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே மேற்படி பூங்காவினை தனியார் மூலம் 2011-2012ம் வருடப் பராமரிப்பு செய்து வர மாமன்றம் தனது தீர்மானம் எண்.71 நாள் 28.01.2011 மற்றும் தீர்மானம் எண்.249 நாள் 25.04.2011-ன்படி ரூ.10.00 லட்சம் மதிப்பில் அனுமதி அளித்து பணிகள் நடைபெற்று வந்தது. தற்போது இதே அடிப்படையில் 2012-2013ம் வருட பராமரிப்பிற்கு இப்பூங்காவினை தனியார் மூலம் ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2667/12**

**110. அனுமதி வழங்கப்பட்டது.**

**26)** ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தின் பெயரான சுதந்திர தின வெள்ளி விழா பெயர் பலகை பழுதடைந்திருந்தது, பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகளின் போது கண்டறியப்பட்டது. தற்போது புதியதாக சத்திரோடு நுழைவு வாயிலில் " சுதந்திர தின வெள்ளி விழா நினைவு நுழைவு வாயில்" கட்ட அனுமதியும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு ரூ.6.80 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/10866/11**

**111. அனுமதி வழங்கப்பட்டது.**

**27)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட அக்ரஹாரம் பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் சுமார் 545 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளி குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் ஏதும் இல்லை. மேலும் மேற்படி பள்ளி வளாகத்தில் சுமார் 30 வருடங்களுக்கு மேல் பயன்பாட்டில் இருந்து வந்த ஓட்டு விலைக்கட்டிடம் மற்றும் ஆர்.சி.சி கூரை கட்டிடங்கள் தற்போது பழுதடைந்து இடிந்து விழும் மோசமான நிலையில் உள்ளது. இக்கட்டிடங்கள் தற்போது பயன்பாட்டில் இல்லை. தற்போது இப்பள்ளியில் உள்ள வகுப்பறைகள் போதுமானதாக உள்ளதாலும் பள்ளிக் குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் பழுதடைந்து எந்நேரமும் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த அப்பள்ளி தலைமையாசிரியர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே அப்பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி மேற்படி ஓட்டு வில்லை மற்றும் ஆர்.சி.சி கூரை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.55,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மாணவ மாணவியரின் நலன் கருதி மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இடித்து அப்புறப்படுத்தப்பட்ட கட்டிடங்களிலிருந்து மறு உபயோகத்திற்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுத்து பொது ஏலம் விடவும் இடித்து அப்புறப்படுத்தப்படும் கட்டிடங்களை மாநகராட்சி சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மேற்படி கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தப்பட தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.55,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பள்ளிக் குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்தி கொடுக்கவும், அப்பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி பயன்படுத்த இயலாத இடிந்து விழும் அபாய நிலையில் உள்ள ஓட்டு வில்லை மற்றும் ஆர்.சி.சி. கூரை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்படும் கட்டிடங்களிலிருந்து மறு உபயோகத்திற்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுத்து பொது ஏலம் விடவும், மற்றும் இடிக்கப்பட்ட கட்டிடங்களை மாநகராட்சி சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/925/12**

**112. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட ராயபாளையம் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் சுமார் 240 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். மேலும் மேற்படி பள்ளி வளாகத்தில் சுமார் 58 வருடங்களுக்கு மேல் பயன்பாட்டில் இருந்து வந்த ஓட்டு வில்லைக் கட்டிடம் தற்போது பழுதடைந்து இடிந்து விழும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் இப்பள்ளிக்கு SSA திட்டம் மூலம் வகுப்பறைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, எந்நேரமும் இடிந்து விழும் வகுப்பறைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே எந்நேரமும் இடிந்து விழும் அபாயநிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மேல் நடவடிக்கை மேற்கொள்ள இப்பள்ளி தலைமையாசிரியர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். அப்பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி மேற்படி ஓட்டு வில்லை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மாணவ மாணவியரின் நலன் கருதி மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இடித்து அப்புறப்படுத்தப்பட்ட கட்டிடத்திலிருந்து மறு

உபயோகத்திற்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுத்து பொது ஏலம் விடவும் இடித்து அப்புறப்படுத்தப்படும் கட்டிடத்தை மாநகராட்சி சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்பட தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி பயன்படுத்த இயலாத இடிந்து விழும் அபாய நிலையில் உள்ள ஓட்டு வில்லை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்படும் கட்டிடத்திலிருந்து மறு உபயோகத்திற்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுத்து பொது ஏலம் விடவும், மற்றும் இடிக்கப்பட்ட கட்டிடத்தை மாநகராட்சி சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/925/12**

**113. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**29) 29-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- சாம்பல்காடு பகுதியில் உள்ள இருபக்க பழுதடைந்துள்ள சாக்கடையை மராமத்து செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கண்ணையன் வீதி-2 இருபக்க பழுதடைந்துள்ள சாக்கடையை மராமத்து செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வீர வீதி, ரங்க வீதியின் இருபக்க சாக்கடைகளை மராமத்து செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மூலப்பட்டறை ஆட்டோ ஸ்டேண்டு சந்தில் உள்ள 29வது வார்டிற்குட்பட்ட வலதுபுற சாக்கடையை மராமத்து செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**114. 29ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிய 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கே. லட்சுமி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**30) 52-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. நீலாவதி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- பொய்யேரிக்கரை வீதியில் ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து சுமார் 200 அடிக்கு குழாய் நீடிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- தங்கபெருமாள் வீதியில் உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து சுமார் 200 அடிக்கு பைப் நீடித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பட்டக்கார வீதி மற்றும் ஜீவானந்த வீதியில் உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து சுமார் 200 அடிக்கு பைப் நீட்டிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈஸ்வரன் வீதி, பொய்யேரிக்கரை, தங்கபெருமாள் வீதி, பட்டக்கார வீதி மற்றும் சேக்தாவூத் வீதி ஆகிய பகுதிகளில் புதிதாக மின்கம்பங்கள் அமைத்து தெருவிளக்கு அமைத்திடவும், காலியாக உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பொய்யேரிக்கரை வீதியில் உள்ள 500 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி இரண்டு பழுதடைந்துள்ளதால் புதிய சின்டெக்ஸ் 500 லிட்டர் அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வார்டு பகுதிகளில் உள்ள பழுதடைந்த அனைத்து சாலைகளையும் சீரமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**115. 56ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. செ. முருகநாதன் அவர்கள் முன்மொழிய 55ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.பி. சுப்பிரமணி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**31) 3-ஆம் மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- ஈரோடு மாநகர் பொதுமக்கள் நலன் கருதி ஈரோடு மாநகராட்சியில் காலியாக உள்ள மாநகர் நல அலுவலர் (C.H.O) அவர்களை உடனடியாக நியமனம் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- ஈரோடு பெரியார் நகர் 80அடி சாலையிலிருந்து (S.K.M வீடு கடைசி பகுதியிலிருந்து) ஈரோடு ரயில்நிலையம் வரை இடையில் உள்ள ஓடைப்பள்ளத்தின் மேலே மேம்பாலம் அமைத்து பொதுமக்கள் பயன்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு காந்திஜி ரோட்டில் உள்ள ஈரோடு மாநகராட்சி மகப்பேறு இல்லத்துக்கு அருகில் உள்ள இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்கள் பயன்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- சூரம்பட்டி ஆசிரியர் காலனி ___ ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள (மூன்றாம் மண்டலம் அலுவலகம் அருகில்) இடியும் நிலையில் உள்ள மாநகராட்சி பள்ளியை இடித்து அப்புறப்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி அருகில் இருந்து கீதாஞ்சலி பள்ளி ரோடு வழியாக புதுக்காலனி வரை சாக்கடை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**116. 3ஆம் மண்டலத் தலைவர் திரு. இரா.மனோகரன் அவர்கள் முன்மொழிய 2ஆம் மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**32)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ன் எல்லைக்குட்பட்ட இந்தியா மார்க்-II வகை கைப்பம்புகள் மற்றும் சிறுமின்விசை மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 01.12.11 முதல் 30.06.12 வரை உள்ள காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு இம்மாமன்றம் தனது தீர்மான எண். 226 நாள் 21.12.11ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் 0.04% குறைவு ஒப்பந்தப்புள்ளி இம்மாமன்ற தீர்மான எண்.251 நாள் 27.12.11ல் ஏற்றுகொள்ளப்பட்டதை தொடர்ந்து 29.12.11ம் தேதி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யும் பொருட்டு மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட இனங்களை விட கூடுதலாக கைப்பம்பு மற்றும் சிறுமின்விசை பம்பு பழுதுகளை சரி செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளதால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக செலவினம் ஆகிறது. எனவே இதே ஒப்பந்தத்தின் மூலம் 30.05.12 வரை ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணியை தொடர்ந்து செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இதே ஒப்பந்தத்தின் மூலம் 30.05.12 வரை தொடர்ந்து செய்வதற்கும் மற்றும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று செய்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**இ2/10735/11**

**117. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

## இடம்- ஈரோடு      மேயர்,

## நாள்- 01.06.2012.      ஈரோடு மாநகராட்சி